திரளட்டும் தலைவர் சேனைகள்! மிரளட்டும் மதவெறிக் கூட்டம்!

உலகில் உள்ள ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்திய ஒன்றியத்தின் மிகப் பெரும் தேர்தல் நடந்தேறியது.

இந்தியா முழுவதும் எதிர்பார்க்கப்பட்ட ஆட்சி மாற்றம் நடைபெறாவிட்டாலும், ஜனநாயகம் தனது கால்களை ஆழ ஊன்றி நிற்பதை நாடே உணர்ந்திருக்கிறது.

பழைய மொந்தையில் பழைய கள்ளாக பாசிச பா.ஜ.க. ஆட்சி அமைத்தாலும், கடந்த தேர்தல்களில் பெற்றிருந்த தனித்துவத்தைப் பெறமுடியாமல் தவிக்கிறது.

எதிரணியான நமது இந்தியா கூட்டணி பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக தனது ஜனநாயகக் கடமைகளை நிலைநிறுத்த தயாராகவே இருக்கிறது.

தேர்தல் முடிவுகள் குறித்தும், மிக மிக சொற்ப வாக்கு வித்தியாசத்தில் இந்தியா கூட்டணி தவறவிட்ட வெற்றி வாய்ப்பினைக் குறித்தும் அரசியல் நெறியாளர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகைகள் பலவாறு படம் பிடித்துக் காட்டி வருகின்றனர்.

மக்கள் மன்றத்தையே சந்திக்காமல், மத்திய மந்திரிகளாகும் தந்திரம் மிகுந்த தர்பைக் கூட்டம் ஒருபுறம்.

மகுடத்தையே கழற்றி, தேர்தல் மந்தையில், சந்தையில் நின்று, மக்கள் ஏற்காமல் மண்ணைக் கவ்விய சூத்திர அடிமைகள் ஒரு புறம்.

எண்ணற்ற கொடுமைகளை எதிர்கொண்டும், தெளிவு பிறக்கவில்லை. சிந்தனையில் வலிவும் பிறக்கவில்லை. வடநாட்டின் பிற்படுத்தப்பட்ட வாக்காளர்களுக்கு,

அறியாமையில் மூழ்கி, ஆயாராம், காயாராம் போல் பாசிச பா.ஜ.க.வின் பசப்பு மொழிக்கு இணங்கி ஏமாந்தனர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1990 -ல் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்திய மனிதாபிமானி வி.பி.சிங் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்வில் கலைவாணர் அரங்கில் தனது தலைமைக் கவிதையில்,

“வாழைமரம் தன்னை வெட்டிக் கட்டியதையறியாமல், வருவோரை வரவேற்கும், மணவீட்டில்!

அதுபோல் வடக்கிலுள்ள பிற்பட்டோர் தங்கள் நிலையறியாது கிடக்கின்றார்!” என முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டார்.

அந்த நிலை இன்னும் மாறவில்லை.

அண்ணா அவர்கள் ஒரு முறை, “இந்தியாவின் வரலாறு கங்கையில் இருந்தல்ல காவிரியிலிருந்து எழுதப்பட வேண்டும்” என்றார்.

அந்த அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற கண்ணான தலைவர் கலைஞரின் கண்மணி தலைவர் தளபதியவர்களின் பொன்னான ஆட்சி, அரசியல் பரிபாலனம் அந்தப் பாதையில் தான் செல்கிறது.

‘நீட்’டிற்கு கேட்டும், நீசமொழி இந்தித் திணிப்பிற்கு பூட்டும், வேலாயுத, சூலாயுத சூழ்ச்சி பரிவாரங்களுக்கு வேட்டும், தனது தேர்ந்த அரசியல் மதிநுட்பத்தால் காட்டும் அவரதுவிழியசைவில்விணைமுடிக்கக்காத்துக்கொண்டிருக்கும் கழகக் காளையர் கூட்டம்.

அதனால் தான் நமது ஆருயிர் தலைவர் தளபதியர்கள் எங்கும் எதிலும் தனித்தன்மை மிக்கவராய் வலம் வருகிறார்.

“அவரது பேச்சோ, தங்கு தடையின்றி பாய்ந்தோடி வருகிறது. மலைகளை துளைத்துக் கொண்டும், கற்களை உருட்டிக் கொண்டும், காடுகழனிகளை வலம் பெற செய்து கொண்டும், நுரை நயத்துடன், ஒய்யார நடையுடன் அங்கே போகிறார். இங்கே வருகிறார்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமது பகுத்தறிவு பெருங்கிழவர் பெரியார் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவார்கள். இந்த சொல்லோவியத்திற்கு சுத்தப் பொருத்தமாய் நமது தளபதியவர்கள் தொடர் வெற்றிகளின் உலைகளமாய்த் திகழ்கிறார்.

பரந்துபட்ட இந்தியாவில் பல மாநிலங்களில் பல்முனை போட்டிகள் நிலவிய சூழலில் மேலும் கீழுமாகவே வெற்றி தோல்விகளை பகிர்ந்து கொண்ட நிலையில் களம் கண்ட அனைத்து இடங்களிலும் வெற்றியை அறுவடை செய்த ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே!

அந்த வெற்றியை ஈட்டித் தந்த பெருமகன் நமது உயிரனைய தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவர் அவர்கள் என்பதில் தான் நமக்கு எவ்வளவு பெருமை! கௌரவம்! கர்வமும் கூட.

இந்தத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் பெரிதும் நம்பியிருந்த நமது தலைவர் நூற்றுக்கு நூறு சதவீத வெற்றியை தேடித்தந்து கூட்டணி தலைவர்கள் நெஞ்சங்களில் விருப்பும், வியப்பும் ஏற்படும் வகையில் தனது நேர்த்தியான தேர்தல் பரப்புரை, நித்தம் மக்கள் நலன் பேணும் ஆட்சி தந்து வெற்றி வாகை சூடினார்.

கழகம் தேர்தல் களங்களில் பயணிக்க துவங்கிய 1957 முதல் ஆடு தாண்டும் காவேரியாக சட்டமன்றத்தில் 15 இடங்கள். 67 -ல் 138 இடங்கள். பின்னர் 1971 -ல் அகண்ட காவிரியாய் 184 இடங்கள். தேர்தல் சக்கர சுழற்சியில் 1977 -ல் 38 இடங்கள் பின்னர் வெற்றி தோல்வி என மாறிய நிலையில் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் எத்தனை எத்தனை பரிமாற்றங்கள்?

அவரிடத்திலே பெற்ற பயிற்சி, இலக்கை சொல்லியடிக்கும் வித்தை இவற்றையெல்லாம் நீண்ட நெடுங்காலம் நின்று, நிதானித்து, கவனித்து, தலைவர் கலைஞரின் மறைவிற்குப் பின்னர் தி.மு.க. எனும் மாபெரும் ஜனநாயக இயக்கத்திற்கு தலைமை ஏற்று 2019 நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 39 இடங்கள் (தி.மு.க. நின்ற அனைத்து இடங்களிலும் வென்று சாதனை). அதே ஆண்டில் உள்ளாட்சி தேர்தலில் மகத்தான வெற்றி. 2021 -ல் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பு . அதே ஆண்டில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி, மாநகராட்சி தேர்தல்களில் இமாலய வெற்றி என வெற்றி மேல் வெற்றி வலம் வரும் தமிழினத்தளபதியவர்கள் அண்மையில் பெற்ற நாடாளுமன்ற அபார வெற்றி. அதற்கும் மேலாக ஐம்பெரும் முழக்கம் தந்து, அணுவளவும் நம் நெஞ்சைவிட்டு அகலாத அன்னைநிகர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா!

இவற்றை உற்சாக மிகுதியில் உடன்பிறப்புகள் ஒன்றிணைந்து ஊர்ப்போற்றக் கொண்டாடஜின் 15 கோவைக்கு அழைக்கிறார்.

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக கல்லறைக்கு போகும் வரை கர்ஜித்த, பகுத்தறிவு பகலவன், வெந்தாடி வேந்தர், ஐயா பெரியாரின் பிறப்பிடமாம் நமது அண்ணா, கலைஞரின் குருகுலமாம் ஈரோட்டை வரமாய் பெற்ற கோவைக்கு அழைக்கிறார்!

வழக்கறிஞர்
வெ.அன்புவாணன்
கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

தமிழின விடியலுக்காய், விரல் எழுதி, கால் தேய நடந்து, குரல்தேயப் பேசிய கொள்கைக்குன்றம், கோபாலபுரம் வீற்றிருந்த கோமான் தலைவர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினைக் காண உரிமையுடன் அழைக்கிறார். கோவையம்பதிக்கு!

காவிக்கூட்டத்தை கதறவிட்ட ஆவிநிகர் தலைவர் அழைக்கிறார் கோவைக்கு!

ஆரியமாயையை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தும் வல்லமைமிக்க சூரியப்புதல்வர் அழைக்கிறார் கோவைக்கு!

நமது இதயவேந்தர் தலைவர் கலைஞர் தனது இளமையில் ஜீபிடரில் கதை, வசனம் எழுத புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரோடு ஒரே வீட்டில் தங்கி, அவரது மூச்சுக் காற்றும், பேச்சுக்காற்றும் நிறைந்திருந்த சிங்கா நல்லூரை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தில், கோவையில், கொடிசியா மைதானத்தில் குடும்பமாய் கூடி, வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்திட நமது குலத்தலைவர் அழைக்கிறார்!

தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் கட்டாயம் புறப்படுவோம்!

தலைவர் தளபதியவர்களின் தம்பிகள் அவரது ஆணையை தட்டாமல் புறப்படுவோம்!

திராவிட இயக்கங்களின் நாளைய நம்பிக்கை, உதயநிதி அவர்களின் உற்ற தோழர்கள் உடனே புறப்படு வோம்!

ஆம்!

காத்திருப்பார் தலைவர் தளபதி!

கனிந்து, கனிந்து!

நம்மை நினைந்து, நினைந்து!

கவனமுடன் புறப்படுவோம்!

தமிழினத்தின் சேவைக்கும், தேவைக்கும் தன்னை அர்ப்பணித்த வெற்றித்திருமகன் கோவைக்கு அழைக்கிறார்!

ஆர்ப்பரிப்போம்! அலைகடலென கோவையில் சங்கமிப்போம்!

திரளட்டும் தலைவர் சேனைகள்!

மிரளட்டும் மதவெறிக் கூட்டம்!

வாழ்க தலைவர் கலைஞரின் பெரும்புகழ்!

வெல்க நமது வெற்றிச்சூரியன் தங்கத் தளபதியவர்கள்!!

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி மேற்கு ஒன்றியம் பூச்சிரெட்டிபள்ளி மத்தூர் ஆகிய கிராமத்திற்கு அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் நேரில் சென்று நடைபெற்ற நாடாளுமன்ற தொகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து வெற்றிபெற செய்ததற்காக பொதுமக்களிடம் நன்றியை தெரிவித்து சிறப்புரையாற்றினார் உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ. நாகலிங்கம், ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன், உள்பட பலர் உள்ளனர்.

கோவையில் முப்பெரும் விழா:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை,ஜூன்.14-

முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் அழைப்பை ஏற்று, கோயம்புத்தூர், கொடீசியா மைதானத்தில் நாளை ஜூன் 15ஆம் தேதி மாலை நடைபெறும் முப்பெரும் விழாவில் பங்கேற்க காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திலிருந்து மாவட்ட நிர்வாகிகள் - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - கிளை கழக நிர்வாகிகள், கழக அணிகளின் மாவட்ட நிர்வாகிகள் வாக்குச் சாவடி முகவர்கள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வர வேண்டும் என்று மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவு விழா - 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 40 க்கு 40 வெற்றி அளித்த தமிழ் நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா மற்றும் இந்த இமாலய வெற்றிக்காக இரவுபகல் பாராமல் கழகத்தினரை சிறப்பான முறையில் வழி நடத்தி சென்ற வெற்றி வீரர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நாளை ஜூன் 15ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர், கொடீசியா மைதானத்தில் நடைபெறுகிறது.

நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் இம்முப்பெரும் விழாவில் நம்முடைய “இந்தியா” கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இம்முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கி ன்றனர்.

நம்முடைய ஒப்பாரும் மிக்காருமில்லா மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் போற்றும் மகத்தான ஆட்சிக்கு வலிமை சேர்க்கும் வகையில், நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தந்த மகத்தான வெற்றியை தந்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கு பிறகு நடைபெறும் இம்முப்பெரும் விழாவில் மாவட்ட கழக நிர்வாகிகள்ஒன்றிய நகர பகுதிபேரூர் கிளை கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்க வேண்டுமென்று நம்முடைய உயிர்ரனைய தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

40க்கு 40 என்று நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது போல, 2026 சட்டமன்றத் தேர்தலில் 200+ தொகுதிகளில் வெற்றியினை உறுதி செய்திட ஜூன்15 கோவை முப்பெரும் விழா நமக்கு ஊக்கம் அளிக்கும் இடமாக அமைய வேண்டும்! காணப்போகும் களங்கள் அனைத்திலும் கழகம் வெல்லட்டும்!! கோவை குலுங்கிட கொள்கைத் தீரர்களே திரண்டிடுக!! என்று நம்முடைய தலைவர் உரிமையோடு நம்மை அழைத்துள்ளார்.

எனவே, நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள், கழக செயல் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு, இம்முப்பெரும் விழாவில் கலந்துக் கொண்டு வெற்றியடைய செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்ற பேரறிஞர் அண்ணாவின் வைர வரிகளுக்கு ஒப்பாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழகத்தினரும் எழுச்சியுடன் திரண்டு கோவையில் புதிய சரித்திரம் படைப்போம் வாரீர்! வாரீர்!! என்று அனைவரையும் மனம் மகிழ்ந்து அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/1200/2024 **மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 3 (மாதவரம்) கனரக மற்றும் இலகுரக வாகன நிறுத்த முனையம், சாலைகள், நிர்வாக மற்றும் பல்நோக்கு கட்டடங்கள் மேம்படுத்தும் பணிகள் (11 சிப்பங்கள்)

பணியின் உத்தேச தொகை: குறைந்தபட்சம் **ரூ.2.89 கோடி அதிகபட்சம் ரூ.3.43 கோடி**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 18.07.2024 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 19.07.2024அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntendersgov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 1927 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 10.09.1937 மறைவு 14.06.2019



செம்மண்ணின் பகுத்தறிவு சுடரே!

பெரியவர் **எஸ்.சிவசுப்ரமணியன்** M.A.,B.L., அவர்கள்
முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர் - முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

உங்கள் நினைவுகளுடன்...
சா.சி.சிவசங்கர்
மாவட்ட கழக செயலாளர் - அரியலூர் மாவட்டம்
போக்குவரத்துத் துறை அமைச்சர் - தமிழ்நாடு அரசு

கே.சி.ஞாயிகதிரவன் DCE.,
மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்

ஆர்.கலியபெருமாள் B.E.,
ஒன்றிய கழக செயலாளர் - ஆண்டிமடம் (தெற்கு)

ஜூன் 15 இல் கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் திரளாக கலந்து கொள்வீர் !

மாவட்ட செயலாளர் - மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 14 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வேண்டுகோள் வருமாறு: -

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” சென்னை வடகிழக்கு மாவட்ட கழக தி.மு.க சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,

மருத்துவ அணி, வர்த்தகர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, தொண்டர் அணி, சுற்றுசூழல் அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, ஆதி திராவிடர் நலக்குழு, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, சிறுபாண்மையினர் நல பிரிவு, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, மீனவர் அணி ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு. 77வது வட்டக் கழகச் செயலாளர் தி.தயாளன் தலைமையில் வட்டக் கழக துணைச் செயலாளர் ஜெ.முரளிதரன் ஏற்ப்பாட்டில் 77வது வட்டத்துக்குட்பட்ட சூளை தட்டான்குளம் பகுதியில் பள்ளி மாணவ மாணவியருக்கு டிபன் பாக்ஸ்,லஞ்ச் பேக், நோட்டுப் புத்தகங்கள், பொதுமக்களுக்கு பிரியாணி ஆகியவற்றை வழங்கினார். இந்நிகழ்வில் 77வது வட்டத்துக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.